STC.No. 496/2023 PW1. திரு. பாண்டியன்

தேதி– 28.05.2024

எதிரி ஆஜர் .

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன் . விவசாயம் தவிர வேறு வருமானம் தரக்கூடிய வேலை எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6– ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிரியும் , நானும் ஒத்த வயதுடையவர்கள் அல்ல என்றால் சரிதான். அதே போல் ஒன்றாக படித்தவர்களும் அல்ல என்றால் சரிதான் . அதே போல் இருவரும் ஒரே வியாபாரமோ , தொழிலோ செய்வது கிடையாது என்றால் சரிதான். அதே போல் இருவரும் ஒரே பகுதியிலோ , அருகாமையிலோ குடியிருப்பவர்கள் அல்ல என்றால் அரை கி.மீ தூரத்தில் குடியிருக்கிறோம். நான் குடியிருந்து வருவதாக சொல்லப்படும் முகவரி தேனி, என். ஆர்.டி நகர் என்றால் சரிதான்.

2) எதிரி சக்தி லட்சுமி குடியிருந்து வருவதாக குறிப்பிடக்கூடிய விலாசம் என்ன விலாசம் என்றால் என்.ஆர்.டி. நகருக்கு அருகில் உள்ள விஸ்வநாத தாஸ் நகர். விஸ்வநாத தாஸ் நகர் என்பதுதேனி புது பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரியல்ல , புதிய பேருந்து நிலையத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தூரம் தள்ளி உள்ளது. என்னுடைய குடியிருப்பு பகுதியும், எதிரியின் குடியிருப்பு பகுதியும் அருகருகே உள்ளது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல . எதிரி சக்தி லட்சுமியை எனது வாழ்நாளில் , முதன் முதலில் எங்கு வைத்து சந்தித்தேன் என்றால் எதிரியின் கணவர் எனக்கு நீண்ட காலமாக பழக்கம்.

3) எதிரியை எனக்கு முதன் முதலில் எப்போது பழக்கம் என்று என்னால் குறிப்பிட்டு கூற முடியாது என்றால் சரிதான் , நீண்ட கால பழக்கம். எதிரி என்ன படித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . எதிரி என்ன வேலை பார்க்கிறார் என்றால் எதிரியின் கணவர் பில்டிங் கான்ட்ராக்டராக உள்ளார் . அவருக்கு எதிரி உதவியாக இருக்கிறார் . எதிரி நிறுவனமாக நடத்துகிறாரா என்றால் இல்லை, வீட்டில் இருந்தே தொழில் செய்கிறார். நான் சொல்வது போல் எதிரியின் கணவர் வேல்முருகன் கான்ட்ராக்டராக வேலை பார்க்கவில்லை என்றாலும், தினக்கூலிக்கு தான் வேலை சென்று வருகிறார் என்றாலும் சரியல்ல.

4) வழக்கு சம்பந்தமாக எதிரி சக்தி லட்சுமியை கடைசியாக எங்கு எப்போது சந்தித்தேன் என்றால் 19.02.2023 ம் தேதியில் , எனது வீட்டிற்கு எதிரியும் , எதிரியின் கணவர் வேல்முருகனும் பணம் கேட்டு வந்தார்கள் . அதன்பிறகு

எதிரியை நான் தொடர்பு கொண்டேனா என்றால் இல்லை . நான் சொல்வது போல் எனக்கும் , எதிரிக்கும் எந்தவகையிலும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி எந்த ஒரு பணியிலும் இல்லை என்றால் சரியல்ல. அவர் வீட்டு வேலை செய்து பிழைப்பு செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு விவசாயம் மூலமாக வரும் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய தயார்.

5) எந்த வகையிலும் என்னிடம் அறிமுகமில்லாத எதிரி ரூ .5,00,000/-கடன் வாங்கியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல . எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை . எதிரியை பற்றிய எந்தவித அடிப்படை விவரமும் தெரியாது எனும் போது , எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்வது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . எதிரியுனுடைய காசோலையை முறையின்றி கைப்பற்றி , எதிரியின் கையொப்பத்தை நானோ செய்து , காசோலையை நானே நிரப்பி , எதிரியிடமிருந்து மோசடியாக பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நான் தாக்கல் செய்த இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல . எதிரி, எனக்கு சட்டப்படியாக தீர்க்கவேண்டிய கடன் எதுவும் இல்லை என்றாலும் அதற்காக தாவா காசோலை கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

Sd/P.Ramesh.,B.L.,
Judicial Magistrate(FAC),
Bodinayakanur.